விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 31 ஜூலகஃ 17 இதழ் 182
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-8-84


## சுன்னாகம் பொலிஸ் நிலையக் கட்டிட
# இடிபாடுகள் அகற்றப்பட்டன!
## வேறு சடலங்கள் இருக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

குண்டு வெடிப்பின் மூலம் தகர்க்கப்பட்ட சுன்னாகம் பொலிஸ்நிலைய கட்டிட இடிபாடுகள் முற்றாக அகற்றப் பட்டுவிட்டன.

ஏற்கனவே மீட்கப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்ட 19 சடலங்களைத்தவிர வேறுசடலங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற சம்பவத்தில் சேதமுற்ற கட்டிட இடிபாடுகளுக்குள்ளிருந்து சடலங்களை மீட்கும்பணி அன்றிரவே ஆரம்பிக்கப்பட்டது.

இக்குண்டு வெடிப்பில் இரு மாடிக்கட்டிடத்தின் மேற்கூரைகளுக்கு சிமெந்துக் கலவைக்குள் வைத்துக்கட்டப் பட்டிருந்த றெயில்வே தண்டவாளக் கேடர்கள் கூட சுருண்டும் இடிபாடுகளுக்குள் காணப் பட்டன.

குண்டு வெடிப்புக்குப் பின்னர் அப்பகுதி மக்கள் இரவோடிரவாக மீட்கும்வேலையில் ஈடுபட்டு, பலசடலங்களை எடுத்ததாகத் தெரிவித்தனர்,

காயமுற்ற பலர் வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கால், கைகளை இழந்தவர்களும் இவர்களுள் அடங்குவர். சிலர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானுர்கள்.

மேலும் இடிபாடுகளுக்குள் சடலம் இருக்கலாம் என்ற சந்தேகத்தினபேரில் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆயிரக் கணக்கான பொதுமக்களும், இளைஞர்களும் இடிபாடுகளை அகற்றும் உபகரணங்களுடன் தேடுதல் வேலைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்னை எதிரொலி
# தமிழகப் பாடசாலைகள்
# நேற்று மூடப்பட்டன!



(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும், பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டுள்ளன. இலங்கையின் வடபகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமையின் எதிரொலியாக நேற்றுமுதல் இவை ஒருவார காலத்துக்கு மூடப்பட்டன.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் இங்கு நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை அடுத்து தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இன்றிலிருந்து ஒருவார காலத்துக்கு சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கும்.

நேற்று சென்னையில் ஆயிரக் கணக்கான கல்லூரி மாணவர்கள் இலங்கை வடபகுதிச் சம்பவங்கள் குறித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்.

இவ்வூர்வலம் பொலிசாரினுல் போடப்பட்ட தடைகளையும் மீறி நடத்தப்பட்டது. பல இடங்களில் இவ்வூர்வலத்தை பலாத்காரமான முறையில் கலைக்கும் முயற்சிகளைப் பொலிசார் எடுத்தனர்.

இதன் விளைவாக ஊர்வலத்தில் சென்ற மாணவர்களுக்கும், பொலிசாருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. இதில் சுமார் ஒன்பது பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர் என்று கூறப்பட்டது

இதுபோன்ற ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதையடுத்தே தமிழ்நாடு முழுவதிலும் இன்றிலிருந்து ஒரு வார காலத்துக்கு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பாண்டிச்சேரியிலும் இலங்கை வடபகுதிச் சம்பவங்கள் தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன என்று கூறப் படுகின்றது. (கி)

## சென்னையிலுள்ள
## அமெ. தூதரகத்திற்கு மாணவர் கல் வீச்சு

சென்னை ஆக 14

சென்னையிலுள்ள அமெரிக்கப் பிரதி தூதரகத்தை மாணவர்கள் நேற்று கல்வீசித் தாக்கினர்

இலங்கையின் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்துமாறு கோரி சென்னையிலுள்ள அனைத்துக்கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே இத்தூதரகம் மாணவர்களின் கல்வீச்சுக்கு இலக்கானது,

இதனையடுத்து சென்னையிலுள்ள இலங்கை உதவித்தூதரகத்திற்கும், அமெரிக்கத் தூதரகத்திற்கும் பலத்த காவல் போடப்பட்டுள்ளது.

## இந்திய, இலங்கை உறவு:
# பலப்படுத்தும் பொறுப்பு மக்களிடமே உண்டு
### ஸ்தானிகர் சத்வாலின் சுதந்திர தினச் செய்தி

(கொழும்பு)

''இந்திய- இலங்கை உறவுகளை உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதோடு அவற்றைப் பலப்படுத்தும் பொறுப்பு இவ்விருநாட்டு மக்களிடமே தங்கியுள்ளது''.

இவ்வாறு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வால் இந்தியாவின் 38 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள விசேட சுதந்திரதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:- இந்தியாவின் 38 வது சுதந்திரதினத்தைமுன்னிட்டு இலங்கையிலுள்ள இந்தியப்பிரஜைகளுக்கும், இலங்கை மக்களுக்கும் இந்தியமக்களின் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் ஒரே நேரத்தில் கிடைத்த சுதந்திரம், காலனித்துவ ஆட்சியில் இவையிரண்டுக்குமிடையே மறுக்கப்பட்டிருந்த நேரடித் தொடர்புகள், உறவுகளை மீண்டும் புதுப்பிக்க வாய்ப்பளித்தது. [கி]

## ● வடபகுதி நிலைமை:
# தூதுவர்களைச் சந்தித்து தமிழ்க்காங்கிரஸ் விளக்கம்

[கொழும்பு]

வடபகுதியின் தற்போதைய நிலைமை குறித்து இலங்கையிலுள்ள இரு வல்லரசுகளின் தூதுவர்களை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், உப தலைவர் திரு. மோதிலால் நேரு ஆகியோர் சந்தித்து விளக்கிக் கூறினர்

இச்சந்திப்பு சுமார் 2 மணித்தியாலம் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இவர்கள் வல்வெட்டித்துறை, சுன்னுகம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த மகஜரொன்றை இரு தூதுவர்களிடமும் கையளித்தனர்.

வடபகுதியின் தற்போதைய உணவுப் பிரச்னை, இதனுல் பட்டினியால் அங்குவாழும் மக்கள் மடியும் நிலை, வங்கிகள் மூடப்படடதால் பணப் புழக்க

(6ம் பக்கம் பார்க்க)

## ஆங்கிலக்கால்வாயில்
# ஆழிக்குமரன் எப்படி மரணமானுர்?
### நீச்சல் சங்கம் விசாரிக்கிறது!

(லண்டனிலிருந்து) மாலி)

ஆங்கிலகால்வாயில் நீந்திக் கொண்டிருந்த போது, சுயநினைவு இழந்து, உயிர்பிரிந்த ஆழிக்குமரன் ஆனந்தனின் மரணம் எப்படிச் சம்பவித்தது என்பது குறித்து மரணவிசாரணையை ஆங்கிலக்கால்வாய் நீச்சல் சங்கம் நடத்தவுள்ளது. இந்த விசாரணை செப்டம்பர் 6ம் திகதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது

ஆங்கிலக்கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சி மேற்கொள்பவர்கள் 1000 பவுண்வரை நீச்சல் சங்கத்திடம் செலுத்த வேண்டும்.

(6ம் பக்கம் பார்க்க)

# கப்பல் கூட்டுத்தாபனத்தில் வெடிகுண்டுப் புரளி

(கொழும்பு)

இலங்கை கப்பல் கூட்டுத் தாபனத்திற்கு வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபன பொது முகாமையாளருக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் அனுமதேய தொலை

(6-ம் பக்கம் பார்க்க)


உ
முருகா

# V.J.S. EXPRESS!

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போதைய நிலைமை கருதி எமது

## யாழ். — கொழும்பு பஸ் சேவை

**16-8-84 வியாழன் முதல்**
காலை 7-00 மணிக்கு
நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்பாகவும்
7-15 க்கு
எரிபொருள் நிரப்பு நிலையம், 113, பிரதான வீதியிலும் இருந்து புறப்படும்.

ரிக்கற் பெறும் இடம்:
லங்கா (F)பில்லிங் ஸ்ரேசன்,
L. F. S., 113, பிரதான வீதி,
(மடத்தடி பெற்ருேல் செற்)
யாழ்ப்பாணம்.
போன்: 24204, 23615.

1333

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒவ்வொருநாளும் அநேக விதப்பொருட்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஞாயிற்றுக் கிழமைகளிலும் போயா தினங்களிலும் பல விதப்பொருட்களும் விசேஷ போட்டி விலைகளில் விற்பனையாகும். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும் கார்த்திகேசு ஏல விற்பனை நிலையம் கோப்பாய். 1251

BAIRAHA FARMS HISEX வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 13ந், 20ந் திகதிகளில் விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1244

### கல்வி

I.C.M.A நவெம்பர் 1984 12 வார இறுதி துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம் 18-8-1984 (Paperclass) ஒவ்வொரு பாடத்திலும் சென்ற ஏழு பரீட்சை வினுக்கட்கு விளக்கமான விடைகள் அளிக்கப்படும். Professionally Qualified Lecturers Section A-300/- Section B-300/-, Professional 1-350/- வன்னியசிங்கம் வைரவர் கடாட்சம் பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24424 1312


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, இல. 58ல் வசித்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை இராமலிங்கம் கைம்பெண் நாகரத்தினம் என்பவரின் மரணசாதன விடயத்தில்

—மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, இல. 58ல் வசிக்கும் இராமலிங்கம் சண்முகநாதன்.

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல. 3811

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இதில் அக்கறையுள்ள எவரும் 1984-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஜுலை மாதம் 10-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு.குலசிங்கம்
பதிவாளர்
1332

## 200 பேர் தஞ்சம்

(புலோலி)

வல்வெட்டித் துறையில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு கொற்றுவத்தை சனசமூக நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 200 பேருக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கடந்த சனிக்கிழமை மதிய போசனத்தை வழங்கியது.

சேவாச்சிரம சுவாமிகள் சுவாமி சித்ரூபானந்தா இவ் உணவுப் பார்சல்களை வழங்கினுர்.

# ‘மூலவளத்தைப் பயன்படுத்தி தொழில்வாய்ப்பை அதிகரிப்போம்’’

(வண்ணுர்பண்ணை)

‘‘எமது நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி எமது மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதும்இந்தமுயற்சிகள் மூலமும் தொழில் வளத்தை எமக்கு நாம் தேடிக்கொள்வதன் மூலமும்தான் நாம் பூரணசுதந்திரமான மனிதர்களாகவும், தன் நம்பிக்கை கொண்ட மக்களாகவும் வாழமுடியும் இதற்கு எமது நாட்டின் மூலவளமான பனை வளம் எமக்கு வழிகாட்டி நிற்கின்றது.

பனை அபிவிருத்திச்சபையின் பொது முகாமையாளர் கலாநிதி எஸ்.மோகனதாஸ் வேலணையில் பனம் பொருள் உற்பத்திப்பயிற்சி நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் மேற்சண்டவாறு தெரிவித்தார்.

வேலணை துறையூர் சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற இப்பயிற்சி நிலையத் திறப்பு விழா வைபவத்திற்கு வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவி திருமதி தி.பத்மாவதி தலைமை தாங்கினுர்.

சர்வோதய இயக்கமும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் இப்பயிற்சியில் 25 பெண்கள் சேர்க்கப்பட்டனர். பனை அபிவிருத்திச் சபையின் போதனுசிரியை திருமதி ம. பாலசிங்கம் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு, சர்வோதய சமித்தித் தலைவர் திரு. ஐ. கந்தையா, திரு. மு. ஆறுமுகம் ஆகியோர் மங்கலவிளக்கேற்றி இவ்வைபவத்தைத் தொடக்கி வைத்தனர்.

கலாநிதி மோகனதாஸ் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது: பனைவளத்தைப்பாதுகாத்தல், விஸ்தரித்தல், பனம்பொருள் உற்பத்தியை அதிகரித்தல், ஆராய்ச்சி செய்தல், ஆலோசனைகள் வழங்குதல், பயிற்சி கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை இன்று பனை அபிவிருத்திச் சபை செய்துவருகிறது. இவற்றைப்பயன்படுத்திப் பலனைப் பெறவேண்டியதும், எமது மூலவளத்தை அதிகரிக்கச் செய்யவேண்டியதும் எமது மக்களது தலையாய கடமையாகின்றது. இதற்கென அரசு பத்துக்கோடி ரூபாவைச் செலவு செய்கின்றது. எமது நாட்டுப் பனைவளத்தைப் பயனுள்ளவகையில் அபிவிருத்தி செய்ய இப்பணம் போதாவிடினும் எமது சொந்தவளத்தை விரிவாக்க எமது முயற்சிகளையும் நாம்செய்யவேண்டும் என்றுர்.

யாழ். பிரதேச சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது ‘‘காந்தி மகான் காட்டிய சுதந்திர உணர்வுகள் இன்று எம்மை விட்டகன்று வருகின்றன. இறக்குமதிப் பொருட்கள் மீதும், ஆடம்பரப் பொருட்கள் மீதும் பற்றுக்கொண்டும் எமது சமுதாயம் சீரழிவதை இன்று நாம் காணமுடிகின்றது.

வாழ்வதற்கு வழிவகுத்து நின்ற பனைவளத்தை நாம் பயன்படுத்தாவிடில் நாம் எந்த வகையிலும் சுதந்திர புருஷர்களாக வாழமுடியாது’’ என்றுர்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி விக்னேஸ்வரி அப்புக்குட்டி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20-8-47 | 14-8-75 |

ஆண்டுகள் மறைந்தாலும் உன் நினைவு மறந்திடுமா?

அப்புக்குட்டி
நாகரத்தினம்

பெருமாள் கோயிலடி

1337

## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம்- ‘மடுதேவாலயம் (தமிழ்)
5-35 ‘கிரேட் பேஸ் கோஸ்ரர்’ (ஆங்கிலம்)
6-00 சிங்கள நிகழ்ச்சி
6-30 தேகாரோக்கிய நிகழ்ச்சி (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 தகவல் நிகழ்ச்சி
7-45 இந்திய சுதந்திரதின சிறப்பு நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 ‘ஐலண்ட் இன் தசன்’ திரைப்படம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

## ஓராண்டு நினைவஞ்சலி

### திரு. கந்தையா மணிவாசகன்

(பொறியியலாளர்)

தோற்றம்: 11-8-1946
மறைவு: 29-7-1983



எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீ வாழ்வாய்!

பிரிவால் துயருறும்
பெற்றோர், மனைவி, மகள் வாசுகி, சகோதரர், உறவினர்.
42/1, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

(1335)


UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28 18 - 1 1 மகாத்மா காந்தி ரோட்.
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி றெஜினு சந்தியாப்பிள்ளை

தோற்றம்: 8-8-1904 மறைவு: 16-7-1984



எங்கள் அன்புத் தெய்வமே! குடும்பத்தின் ஒளி விளக்கே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் கடந்து விட்டாலும் உங்களது நினைவுகள் எம்மைவிட்டு அகலாது. என்றும் எம் உள்ளங்களில் அணையா ஒளியாயிருந்து இருள் சூழ்ந்து விட்ட எம் வாழ்வை வழிப்படுத்தவும் உங்கள் ஆன்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேம். அன்னுரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக எதிர்வரும் 16-8-84 வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். ஆசனக்கோவிலில் துக்கப்பாடற் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15, 6-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (1334)

## 31ந் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் செல்லையா இரத்தினம்

(பிரபல சுருட்டுத் தொழில் அதிபர்)

தோற்றம்: 02-09-1910 மறைவு: 16-07-1984



எம்மை ஆருத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைப்பிரிந்து 31 நாள் பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மாசாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கின்றேம்.

16-7-84 அன்று அன்னுரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மற்றும் உதவிபுரிந்து துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கின்றேம்.

இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் பங்கு கொண்டு ஆத்மா, சாந்தியடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றேம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
15-08-84 (1336)

## 38-வது இந்திய சுதந்திர தினம்

# இந்தியா: அன்றும் இன்றும்

இந்தியா என்றதும் இன்றைய தலைமுறையினருக்கு இந்திராகாந்தி அம்மையார் தான்முதலில் நினைவுக்கு வருவார்.

அன்பும் ஆதரவும் பிரதிபலிக்கும்தாயின்முகப்பெ லிவு அனுபவம். பெருமை, நிதானம் நேர்மை முதலியவற்றை எடுத்துக்காட்டும் நரைத்நகேசம், பழம்பெரும் பாரதத்தின் பண்பாட்டு முத்திரையாய்க் காட்சிதரும் அந்த அம்மையாரின் நெடிய உருவம் ஒரு சரித்திரநாயகியை நம்கண் முன் நிறுத்திவிடுகின்றது.

நம்மில் சற்றுவயதில் கூடிய பெரியவர்களுக்கு, இந்தியா, யும் தாழ்த்திக்கொண்டு, அவர்களைப் பக்கபலமாக வைத்து வீழ்ந்துவிட்டதாய கத்தை தோள்கொடுத்துத்

பி. எஸ். பி.

தூக்கிச் சுதந்திரப்பூமியாக நிறுத்துவதில் மாகாத்மகாந்திஜி நிழ்த்திய சாதனை சமீபகாலத்தில் நடந்து முடிந்ததோர் மகா அற்புதம்,

அந்த வீரவேள்வியில் தம்மைப் புடம்போட்டுக் னின்று உழைத்தார் நேரு. அந்த ஸ்தாபனமும் வளர்ச்சியுற்று, பல்வேறு கொள்கைகளையும் எதிர்மாறான அரசியல் போக்குகளையும் மேற்கொண்டுள்ள நாடுகள் பலவும் ஒன்றாக இணைந்து வல்லரசுகளின் கெடுபிடிகளுக்குச் சவாலாகவும், உலக அமைதிக்கு ஊன்றுகோலாயும் பரிணமித்துள்ள நிலையில் நேருஜியின் புத்திரியே அதன் தலைவராகவும் விளங்குகின்றார்.

சிறுவயது முதலே தந்தையின் அருகிலேயே இருந்து அவர் எதிர்கொண்ட பிரச்னைகள் அவைகளை அவர் சமாளித்த முறைகளை யெல்லாம் அவதானித்து அனுபவம் பெற்றவரான திருமதி காந்தி

## தருணம் அறிந்து முடிவெடுக்கும் தலைவி இந்திரா

வென்றால் இன்றைய இந்திரா காந்தி மாத்திரமல்ல, அன்றையநேரு அவருக்குவழி காட்டியாய் விளங்கியவரும் பாரதச்சுதந்திரத்தின் பிதாமகருமானகாந்திஜீயுமே முதலில் கண்முன் தோன்றுவார்கள்.

மகான் அரவிந்தர் நேத்தாஜி, திலகர், ராஜாஜி, விநோபா, தாகூர் போன்றோரும் அவர்களுக்கு இணையாக விளங்கிய ஏனையோரும் இந்தியவரலாற்றை அழகு செய்தபெரியோர்களாவர்.

வெளிநாட்டவர்கள் சுரண்டுமட்டும் சுரண்டி, மேலும் சுரண்டுவதற்கு ஒன்றுமில்லையென்றநிலையில் இந்திய மக்கள் வறுமைப்பிணியில் கொண்டு சாதனைபுரிந்த பெருமக்களில் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் காந்திஜியின் ஆசியுடன்சுதந்திந்திரஇந்தியாவின் முதலாவது பிரதம மந்திரியாகும்பேற்றினைப்பெற்றார்.

சுதந்திரத்துக்குப்பின் ஏறத்தாள 35 ஆண்டுகால முற்பகுதி நேருஜியின் கையிலும், பின்பகுதி அவரது ஏகபுத்திரி திருமதி இந்திரா காந்தியின் கையிலுமே இருந்து வந்துள்ளது. இடையில் ஒரு சில ஆண்டுகள் லால்பகதூர் சாஸ்திரியும், மொரார்ஜி தேசாயும் பிரதமர்களாகஇருந்துள்ளனர். நாட்டின் ஏழ்மையை நீக்குவதற்குப் பொருத்தமானதும், தமது தந்தையாரின் பணிகளுக்கு இடைஞ்சலாக இருந்தவர்களையும் இனங்கண்டு கொண்டார். நேருஜியின் மறைவுக்குப்பின் அந்த எதிர்சக்திகளை யெல்லாம் முறியடிக்க வேண்டிய கட்டாயமும் அவருக்கு ஏற்பட்டது. தேசிய சர்வதேசிய மட்டங்களில் உருவான பல்வேறு சவால்களையும் ஒரு பெண்ணாக இருந்தும் கூட மிகுந்த துணிச்சலுடன் அவர் எதிர்கொண்டு சமாளித்து இந்தியாவை ஒரு தன்னிகரில்லா தலைமை நிலைக்கு உயர்த்தியுள்ளார். அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள அதேசமயம் அப்பொறுப்பு இல்லாதவிடத்தும் இப்பிரதேசத்தின் பல நாடுகளுக்கு முன்மாதிரியாகவும் முன்னோடியாகவும் இந்தியா விளங்கிவருகின்றார்.

1971-ம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானில் உருவான நெருக்கடியின்போது 90 லட்சம் வங்காளிகள் இந்தியாவுக்குள் நுழைந்ததையடுத்து இந்தியப்படைகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் நுழைந்து முஜிபுர்ரகுமானுக்கு ஆதரவான முக்திபாகினிபடைகளுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. மேற்கிலும் கிழக்கிலும் பலம்வாய்ந்த பாகிஸ்தான்படைகளை எதிர்கொண்டு போராடிய வேளையில் எல்லைப் பிரதேசத்தில் சீனப்படைகள் குவிக்கப்பட்டும் அமெரிக்காவின் 7-வது கடற்படை வங்காளக்கடலைநோக்கி விரைந்து கொண்டிருந்தும் உலக யுத்தமே வெடிக்கப்போவது போன்ற அச்சம் உலகத்தை வாட்டியது. உலகமே பிரமிக்கும் விதத்தில் பங்களா தேசத்தை உருவாக்கிக் கொடுத்து [illegible] யுத்தத்தையும் சடுதியாக நிறுத்தி[illegible] சாதனை புரிந்தார் இந்திரா காந்தி.

எதை, எப்படி, எந்நேரத்தில் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் மதிநுட்பம் படைத்தவரான இந்திரா காந்தி உள்நாட்டு விவகாரங்களிலும், சர்வதேசப் பிரச்னைகளிலும் தமது இத்திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.



''தேசிய சர்வதேசிய மட்டங்களில் உருவான பல்வேறு சவால்களையும் ஒரு பெண்ணாக இருந்தும் கூடமிகுந்த துணிச்சலுடன் சமாளித்து இந்தியாவை ஒரு தன்னிகரில்லா தலைமை நிலைக்கு உயர்த்தியுள்ளார்''.

கடந்தவருடம் ஜூலையில் இலங்கையில் இனக்கலவரங்கள் வெடித்த சமயம் தமது நாட்டின் சிறப்புமிக்க சிந்தனைவாதிகளில் ஒருவரான திரு.

(4ம் பக்கம் பார்க்க)



1938-ம் ஆண்டு அமரர் ஜவஹர்லால் நேரு தமது ஒரேமகள் இந்திராவுடன் செக்கோஸ்லவாக்கியாவுக்கு விஜயம் செய்த போது இப்படித் தோற்றினார்கள்.

கிடந்து உழன்றுக்கொண்டிருந்த வேளையிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் [illegible] இந்திய மண்ணைவிட்டு அசைந்து கொடுகக மறுத்துவிட்டது. எஞ்சியிருந்த மனிதசக்தியையும் கூட விட்டுவைக்க மனமில்லாத பிரிட்டிஷார், இலங்கை, தென்னாபிரிக்கா, பர்மா, பிஜித்தீவுகள் போன்ற நாடுகளுக்கு இந்தியக்குடி மக்களை கூலிகளாய்க்கொண்டு சென்று அவர்களின் உடல் உழைப்பைக் கசக்கிப்பிழிந்து உறிஞ்சினார்கள்.

### சிறப்புக் கட்டுரை

ஏழ்மையில்உழன்ற இந்திய மக்களின் நிலைக்கு உணவு, உடைமுதலியவற்றில் தம்மை மக்கள் அதிகாரத்தை அபகரிக்காததுமான, இந்திய நாட்டுக்குப் பொருத்தமெனக் கருதப்பட்ட ஜனநாயக சோஷலிசத்தை நேரு அறிமுகப்படுத்தி மெருகூட்டி வளர்த்தார்,

அதேசமயம், வல்லரசு முகாம்களிலோ, அரசியல் சித்தாந்த சிக்கல்களிலோ நாடு சிக்கிவிடாதும் காப்பாற்றினர். சகல அம்சங்களாலும் நொடித்துப்போய்க் கிடக்கும் [illegible] நாட்டைப்போன்றே சுதந்திரம் பெற்றுவிட்ட ஏனைய ஆசிய நாடுகளும் வல்லரசுக்கெடிபிடிகளில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கவும், சுதந்திரமாக அவை தமது வளர்ச்சியில் கவனம் செலுத்தும்விதத்திலும் உதவக்கூடிய அணிசேரா இயக்கத்தை அமைப்பதற்கு முன்

மகிழ்ச்சிபொங்க

வாழ்த்துகின்றோம்

V

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு உற்ற நண்பன்

பிரதான தலைமையகம்:

45,ஜனாதிபதி மாவத்தை — கொழும்பு-1

வெளிநாட்டு நாணய வங்கிச்சேவை

13 3/3, லயட்ஸ் கட்டிடம் — கொழும்பு-1

கிளை:

61, அநாகரிக தர்மபால மாவத்தை — மாத்தறை.

# விதை வெங்காயம்

## இறக்குமதி முடிவுற்றது!

[கோப்பாய்]

விதை வெங்காய இறக்குமதி விடயம் முற்றுப்பெற்றது. விவசாயிகள் செலுத்திய முற்பணம் காலக்கிரமத்தில் திருப்பிக் கையளிக்கப்படும்.

வடபகுதி விவசாயிகளுக்கு இந்தியாவில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவாளர் சமாஜம் எடுத்த முயற்சி கைகூடாமற் போய்விட்டது.

தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் இந்தியாவில் இருந்து விதை வெங்காயம் இறக்குமதி செய்யமுடியவில்லை. இதனால் விவசாயிகளிற்கு ஏற்பட்ட சிரமங்களிற்கு மனம் வருந்துகின்றோம் என்று யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவாளர் சமாஜம் வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

இதனைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முற்பணம் செலுத்திப் பதிவுசெய்து தமது உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. முற்பணம் காலக்கிரமத்தில் திருப்பிவழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் யானைகள் அட்டகாசம் அதிகரிப்பு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக அறுவடை நடைபெற்றுவரும் இவ்வேளை பல கிராமங்களில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இதனால் அறுவடையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், புதுமுறிப்புக்குளம், கோணவில், கல்மடு ஆகிய பகுதிகளிலே யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இவ்யானைகள் நெற்சூடுகளைத் துவசம் செய்தும் அறுவடைக்குத் தயார்நிலையிலிருந்த நெற்கதிர்களை நாசம் செய்தும் வருகின்றன.

யானைகளின் அட்டகாசத்திற்கு முடிவுகட்டும் முகமாக அரசாங்க யானை துரத்தும் குழுவொன்று கிளிநொச்சிக்கு வரும் எனப் பல மாதங்களின் முன்பு தெரிவிக்கப்பட்டது ஆனால் யானை துரத்தும் குழு பல மாதமாகியும் இங்கு வரவில்லை.

இந்த யானைகள் பலரைப் படுகாயப்படுத்தி, அப்பாவி மக்களைக் கொன்று பல லட்சரூபா பெறுமதியான பொருட்சேதத்தை விளைவித்து வருகிறது.

## ஜேர்மனியில் மரணம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுகிழக்கைச்சேர்ந்த கனகசபை திருவாசகம் [25வயது] மேற்கு ஜேர்மனியில் காலமானார் கடந்தசில வருடங்களாக மேற்கு ஜேர்மனியில்பணிபுரிந்து வந்தபிரஸ்தாப இளைஞரின் இறுதிக்கிரியைகளை உறவினர்களும், நண்பர்களும் ஒன்றுகூடி ஜேர்மனியிலே நடத்திமுடித்துள்ளனர்.

# ஓர் இலைமறை காய்

அமரர் தி. சண்முகராசா அவர்களின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் இனத்துக்கே ஓர் பேரிழப்பாகும்.

தனிச்சிங்களச் சட்டத்தால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்ட பொழுது தொழிற்சங்கங்கள் அவர்களைக் கைவிட்டன. தமிழ் ஊழியர்கள் எல்லையில்லா வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருந்த போது அச்சுமையைத் தாங்குவதற்கு அன்னார் ஓர் சுமைதாங்கியாகவிருந்தார். அந்நாளில் அவர் எனக்கு ஓர் ஆலோசகராக, சேவையாளனாக, சகோதரனாக நடந்து என்மனதைவிட்டு என்றுமே அகலாத ஓர் அன்பராக என்னுள்ளத்திற் பதிந்துள்ளார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின்சாதனைகளில் ஒன்று ''மொழி வழக்காகும்'', 'சிங்களம் மட்டும் சட்டம்'' அன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று நிரூபித்தபெருமை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைச்சாரும். அம்முயற்சியில் பெரும் பங்கெடுத்து தனது மனத்தைரியத்தையும் விடா முயற்சியையும் வெளிப்படுத்தியவர் அமரர் ''சண்''

இப்படிப்பட்ட ஆற்றல் மிக்க ஒருவர் பழகுவதற்கு மிக எளிமையானவர். எவருக்கும் உதவி செய்வதற்கு எப்பொழுதுமே முன்னிற்பார். தமிழரின் கலை கலாசாரத்தை வளர்ப்பதற்கும், சைவத்தை வளர்ப்

(5ம் பக்கம் பார்க்க)


# ஆர்பிக்கோ

## இம்மாதச் சலுகைப் பொருள்

## 10% விலைக் கழிவு

## சாப்பாட்டு மேசைகளும் கதிரைகளும்

உருக்கினாலான சதுர, நீள் சதுர, வட்ட வடிவங்களில், பல்வேறு டிசைன்களில் சாப்பாட்டு மேசைகள். விலைகள் ரூபா 850/- தொடக்கம் ரூபா 2,200/-வரை.

மேற் பகுதி தோலினால் அமைந்த சொகுசு சாப்பாட்டு சுழல் கதிரைகளும், சாய்மனைக் கதிரைகளும் - ரூபா 275/- தொடக்கம் ரூபா 1,500/- வரையிலான விலைகளில்.

யாழ்ப்பாணம்: டிருன்ஸ் லங்கா மார்க்கட்டிங் லிமிட்., மொடல் மார்க்கட் கட்டிடம்.

மட்டக்களப்பு: ஈஸ்ரேர்ண் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ், மூனை வீதி.

**றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்.,**

69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு-2

தொலைபேசி: 25705-6


# இந்தியா: அன்றும் இன்றும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தசாரதியைத் தூதுவராக இலங்கைக்கு அனுப்பி இனப்பிரச்னைக்கு ஆக்கப்பூர்வமான ஒரு தீர்வினை பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்த முயன்றார். துரதிருஷ்டவசமாக இலங்கை அரசியல்வாதிகளின் குறுகிய போக்கினால் அம்முயற்சி இன்னமும் எதிர்பார்த்த வெற்றியைத்தரவில்லை.

இந்தியாவின் உதவியே இல்லாமல் வேறுநாடுகளின் உதவியுடன் இப்பிரச்னையை முற்றாக ஒழித்து விடலாம் என நம் நாட்டுத்தலைவர்கள் கருதுகிறார்கள் போலும். இலங்கையின் தேசிய விவகாரங்களில் எப்பொழுதுமே இந்தியாவின் பிரதிபலிப்பு இருந்தே வருகின்றது என்ற வகையில் இங்குள்ள தமிழர் பிரச்னையிலும் இப்பிரதிபலிப்பினை எவரும் அசட்டை செய்துவிடமுடியாது. யாரும் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ இப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் இந்திரா காந்தி அம்மையாரின் முயற்சி தக்க தருணத்தில் கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்பி எதிர்பார்ப்பது வீண்போகமுடியாது.

## சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்

இந்தியா சென்று திரும்பிய ஒருவர், அந்த நாட்டின் ஏழ்மையை மிக விசனத்தோடு எடுத்துக் கூறினார். அன்றைய இலங்கையோடு இந்தியாவை ஒப்பிட்டுப்பேசிய அவர், இலங்கையின் நிலையை அடைவதற்கு இன்னும் எத்தனையோ ஆண்டுகள் தீவிர முயற்சியில் ஈடுபடவேண்டியிருக்கும் என்று கூறியது எனக்கு இப்போதும் நினைவிருக்கிறது.

அந்தக் காலக் கட்டத்தில் இலங்கையின் நாணயத்துக்கு அவ்வளவு செல்வாக்கு, இங்கிருந்து பணம் அனுப்புவதற்கு இந்திய இனத்தவர்கள் படும் திண்டாட்டத்தை அந்தக் காலத்தில் பார்க்க வேண்டும்!

ஆனால் இன்று நிலைமை எவ்வாறு இருக்கிறது?

இந்தியாவில் பத்து ரூபாவுக்கு வாங்கப்படும் சாதாரண துண்டு வேட்டியொன்று இங்கு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறதென்றால் அந்த நாட்டின் வளர்ச்சியையும் எமது நாட்டின்வீழ்ச்சியையும் புரிந்து கொள்ளலாம்.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு கள்ளமார்க்கட்டில் பணம் சென்ற நிலைமை மாறி இந்திய செலாவணிக்காக இலங்கையர்கள் காத்திருக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

உள்நாட்டு வளங்களை விருத்தி செய்துள்ளதுடன், வெளி சக்திகளின் பயமுறுத்தலுக்கு சளைத்துவிடாமல் அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் அளவுக்கு திறமையும் பெற்றிருப்பதை இந்தியா உலகுக்குப் பறைசாற்றியுள்ளது. விண்வெளி ஆராய்ச்சிக்கென செய்மதிகளை வானில் பறக்கவிட்டு சாதனை புரிந்துள்ளதுடன், சோவியத் உதவியுடன் வீரர் ஒருவரை விண்வெளியிலும் செலுத்தி வெற்றி கண்டுவிட்டது.

## சுதந்திரத்திற்குப் பின் சில முக்கிய நிகழ்ச்சிகள்

1947, ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி பிரிட்டனிடமிருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது. ஜவஹர்லால்நேரு முதலாவது பிரதமராக பதவி ஏற்றார். 1948 ஜனவரி 30-ம் திகதி மகாத்மாகாந்தி கொலை செய்யப்பட்டார். 1948, 49ல் காஷ்மீர் விவகாரம் காரணமாக இந்தியா-பாகிஸ்தான் போர் மூண்டது. 1965ல் அது மீண்டும் நிகழ்ந்தது. 1950 ஜனவரி 26-ல் பிரிட்டிஷ் பொதுநலநாடுகள் அமைப்பிற்குள்ளேயே பாராளுமன்ற குடியரசாக இந்தியா பரிணமித்தது. 1962 அக்டோபரில் சீன-இந்தியா எல்லைச் சண்டை இடம் பெற்றது.

1964ல் நேரு காலமானார். லால்பகதூர் சாஸ்திரி பிரதமரானார். சாஸ்திரி திடீரெனக் காலமானதால் 1966 ஜனவரியில் திருமதி இந்திரா காந்தி பிரதமரானார் 1967, 1971 பொதுத் தேர்தல்களில் அவர் கட்சி வெற்றிபெற்று பதவிக்கு வந்தார்.

1971 மார்ச் மாதம் கிழக்குப் பாகிஸ்தானில் (பங்களா தேஷ்) உள்நாட்டுப் போர் மூண்டதனால் 90 லட்சம் அகதிகள் இந்தியாவுக்குள் வந்து சேர்ந்தார்கள். இதன் காரணமாக இந்தியா தலையிட நேர்ந்தது. டிசம்பர் 3ம் திகதி இந்தியப் படைகள் கிழக்குப்பாகிஸ்தானுக்குள் நுழைந்தன. 13 நாட்களின்பின் பாகிஸ்தான் பணிந்தது.

1974ல் அணுகுண்டு ஒன்றை வெடித்துப் பரிசோதித்ததன் மூலம் வளர்முக நாடுகளில் முதன் முதல் அவ்வாறான சோதனை நடத்திய முதல் நாடாகியது இந்தியா. 1977 மார்ச் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் இந்திராவும் அவரது காங்கிரஸ் கட்சியும் உலகமே அதிசயிக்கத்தக்கவிதத்தில் படுதோல்வியடைந்தனர்.

ஜனதா கட்சியைச் சேர்ந்த 8 வயது மொரார்ஜி தேசாய் பிரதமரானார். 1978 ஜனவரியில் காங்கிரஸ் கட்சியிலிருந்து திருமதி இந்திரா காந்தி வெளியேற்றப்பட்ட போதிலும் காங்கிரஸ்வாதிகளாகிய சகாக்களையும்சேர்த்து தமது செல்வாக்கிற்குட்பட்ட காங்கிரஸ் கட்சியொன்றை உருவாக்கி 1978 நவம்பரில் மீண்டும் பாராளுமன்றத்திற்கு திருமதி காந்தி தெரிவானார். ஆனால் டிசம்பர் மாதத்தில் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டு ஒரு வார காலம் சிறைவைக்கப்பட்டார்.

1974 ஜூலை மாதம் தேசாய் கட்சிப் பூசல் காரணமாகப் பதவி துறந்தார். 77 வயது சரண்சிங் பிரதமரானார். பெரும்பான்மை அரசு ஒன்றை நிலைநாட்ட அவரால் முடியாதுபோனதால் 1979 ஆகஸ்ட் 22ம் திகதி ஜனதா ஆட்சி கலைககப்பட்டது. 1980 ஜனவரியில் நடந்த தேர்தலில் திருமதி இந்திரா காந்தியின் காங்கிரஸ் ஐ கட்சி அபரிமிதமான வெற்றியுடன் பதவிக்கு வந்தது. 33மாத கலம் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்த அவர் மீண்டும் 1980 ஜனவரி 14ம் திகதி பிரதமரானார்.

★ ★

இந்திய மண்ணில் எதுநேர்ந்தாலும் அது அந்த நாட்டைச் சுற்றியுள்ள அனைத்து நாடுகளையும் பாதித்துவருவது நெடுங்காலமாக நீடித்துவரும் ஒரு நியதியாகி விட்டது.

லெமூரியா கண்டம் நிலப்பரப்பாக இணைந்து கிடந்த காலத்தில் தென்னிந்தியாக் காடுகளிலிருந்து இந்நாட்டுக்கு நடந்துவந்து குடிபுகுந்த வன விலங்குகளில் யானைஇனம்இன்னமும் எதுவித மாற்றமும் இன்றி இங்கு வாழ்ந்து வருகின்றது. நிலப்பரப்புக்களை கடல் கொண்டு விட்டாலும் அதற்கு முன்பிருந்தே இங்கு நிலைகொண்டுவிட்ட பண்பாட்டுக் கலாசாரங்கள் நீடித்து வருகின்றன. அக்காலத்தில் நிலம்வழியாக இங்கு குடியேறிய மக்களில் தமிழ் இனமும் ஒன்றாக இருக்கலாம் என்று கொள்ளலாம் அல்லவா?

இலங்கையின் பூர்வீகக் குடிகள் பற்றிய ஆய்வில் லெமூரியா கண்டம் பற்றிய விபரங்கள், பல உண்மைகளை வெளிப்படுத்தலாம் தென்னிந்தியத் தரைப்பகுதியாகவே இலங்கையும் இருந்திருக்கும் என்றால் இப்பிரதேசத்தை கடல் கொள்வதற்கு முன்பிருந்தே தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மை நிலைநாட்டப்படும்.

# இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 3 (15- 08- 1984)
வாரம்- புதன்
திதி- சதுர்த்தி- பின்னிரவு 4-24 வரை
நட்சத்திரம்- உத்தரட்டாதி பின்னிரவு 3-14வரை

மேடம்: கொள்கையில் கோணல், நல்ல சந்தர்ப்பத்தைத் தேடித்தரலாம், பிள்ளையொன்றின் பிணி கவலையைக் கொடுக்கும், அமைதியுடன் செயலாற்றவும்.

இடபம்: இதயப்படுதாவில் இன்பக்கூத்து, வாழ்க்கையில் சில காரியங்கள் நிறைந்ததாக இருக்கும், கற்றதின் பயன் இன்று கைமேல்கிடைக்கும், நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

மிதுனம்: குறைகேட்க நேரிடும், கடமையில் தடை தோன்றும், நஷ்டத்திற்கும் இடமுண்டு, நாவடக்கம் நன்று, உடல் நலிவு தோன்றும், பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

கடகம்: வாகனச் சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர், தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்து சிபார்சும் கிடைக்கும்.

சிங்கம்: வியாபாரம் செய்வோர்களுக்கு நல்ல வருவாயுண்டு, புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

கன்னி: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும், உணவு விடயத்தில் அதிக கவனம செலுத்தவும், வேவுகளைக் கைத் தொடுப்பதற்கு எதிரிகள் காத்

(5-ம் பக்கம் பார்க்க)

# பழமையும். புதுமையும் பிரதிபலித்த

# 'ஒலிம்பிக் நிறைவு வைபவம்!

லாஸ் ஏஞ்சல்ஸ், ஆக. 14

**லாஸ் ஏஞ்சல்ஸ் 23-வது ஒலிம்பிக் பந்தயங்கள் நேற்று முன்தினம் கோலாகலமான முறையில் முடிவடைந்தன. நிறைவு நிகழ்ச்சிகளில் ஒலிம்பிக்கின் பழமையும் அமெரிக்காவின் விண்வெளி யுகத்தின் புதுமையும் ஒருங்கே பிரதிபலித்தன.**

ஒலிம்பிக் நிறைவு நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தை லாஸ் ஏஞ்சல்ஸ் கொலிஸீயம் அரங்கில் சுமார் ஒரு லட்சம் பார்வையாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது மெய்வல்லுநர் பந்தயங்களின் இறுதிப் பந்தயமான மரதன் ஓட்டத்தின் முன்னணி வீரர்கள் அவ் ஓட்டத்தை நிறைவு செய்ய வந்து கொண்டிருந்தனர்.

நிறைவுநாள் வைபவத்தின் போது ஒரு பந்தயமும் இடம் பெற்றது 'ஒலிம்பிக்' வரலாற்றில் இதுவே முதல்தடவையாகும் பந்தயங்கள்யாவும் முழுமையாக முடிவடைந்த பின்னர் நிறைவு நாள் வைபவங்கள் மட்டும் ஒருதினத்தில் நடத்தப்படுவது 'ஒலிம்பிக்'கில் முன்னர் வழமையாக இருந்து வந்தது.

எனவே அதிநவீன பாணியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் நிறைவுநாள் வைபவத்தில் 'ஒலிம்பிக்'கின் மிகப் பழமைவாய்ந்த பந்தயமான 'மரதன்' ஓட்டமும் நிறைவு பெற்றது. பழமையும் புதுமையும் ஒருங்கே இந்நிறைவு தினத்தில் பிரதிபலிப்பதாக இருந்தது.

'கொலிஸியம்' அரங்கின் மேலே விண்கலமொன்றின் வடிவில் ஹெலிகாப்டர் ஒன்று வடிவமைக்கப்பட்டு விடப்பட்டிருந்தது. இதனுள் விண்வெளி மனிதர் ஒருவர் அமர்ந்திருந்து பார்வையாளர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் வாழ்த்துக் கூறினர். இந்நிகழ்ச்சி அமெரிக்காவின் நவீன விண்வெளியுகத்தைப் பிரதிபலித்தது.

அமெரிக்காவின் பிரபல பாடகரான 'லயனல்றிச்சி' என்வர் பிரமாண்டமான இசை விருந்தொன்றை வழங்கினர். இவ்விசை நிகழ்ச்சியில் தற்போதைய அமெரிக்கப் பாணியைக் கொண்ட இறுநூறு நடனக்காரர்களும் கலந்து கொண்டனர்.

இறுதியாக லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் திரு. உபரோத் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் ஆகியோர் பார்வையாளர்கள் முன்தோன்றி பிரியாவிடை பெற்றனர். இதையடுத்து ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டு ஒலிம்பிக் தீபமும் மெதுவாக அணைக்கப்பட்டது. இதுஒரு உணர்ச்சி பூர்வமான நிகழ்ச்சியாக இருந்தது.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து 24-வது ஒலிம்பிக் இடம் பெறவுள்ள தென் கொரியா நாட்டின் தேசியக் கொடி அரங்கில் ஏற்றப்பட்டது.

(கி)

## கல்லூரிகள் தோறும் தொழிற் பயிற்சிகள்!

(வண்ணார்பண்ணை)

கல்விபயின்று பாடசாலையை விட்டுவிலகிய மாணவிகளது தொழில் வசதிகருதி யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் கல்லூரிகள் தோறும் தொழிற்பயிற்சிகளை நடத்திவருகிறது.

இதன் தொடரில் இம் மாதம் முதல் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் இத் தொழிற் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சி தொடர்பான நடவடிக்கைகளை தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு கே. முருகையா செய்து வருகிறார்.

ஆறுமாதகாலம் நடைபெறும் இப் பயிற்சியில் தையல், கைப்பணி, மனையியல், தட்டச்சுப்பயிற்சி தொடர்பான எட்டுவகைப் பயிற்சிகள் கொடுக்கப்படவுள்ளன. அறுபது படித்தயுவதிகள் இப் பயிற்சி நெறிக்கு சேர்க்கப் பட்டுள்ளனர்.

'ரவுணுக்கு' வந்து அவஸ்தைப்படாதீர்கள் !

வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்கள் பெறுவதற்கென யாழ். பட்டினத்திற்கு வந்து அவஸ்தைக்குள்ளாகாதீர் !

உங்கட்கு வேண்டிய அழைப்புக்களை, நாங்கள் எங்கள் ரெலிபோன்களில் சுழல் (DIAL) செய்து, எமது 'சுவிச்போட்' மூலமாக —

உங்கள் ரெலிபோனுக்கு இணைப்புச் செய்துதருகிறோம் ;

உங்கட்கு ரெலிபோன் இல்லையாயின், உங்கட்கு அண்டிய அயலவரின் ரெலிபோனுக்கு இணைப்புச் செய்து தரலாம்.

வெளிநாட்டு அழைப்புக்கள் வேண்டியபோதெல்லாம் இரவோ பகலோ எந்நேரமானாலும் கூப்பிடுங்கள் குளோபலை.

குளோபல்- ரெலி : 23015, 23249, 23312.

## இன்றைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பர், நண்பர் ஒருவருடன் மோதல்ஏற்படலாம், அமைதி நன்று.

துலாம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், காதலர் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் இடம் பெறும், புத்திரர் வழியாலும் மகிழ்ச்சியுண்டு.

விருச்சிகம்: பணத்தைக் கொடுத்து பகையை சம்பாதித்துக்கொள்வீர்கள், தொழிற் துறையில் சோர்வு தென்படும், நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றக்கூடும், நிதான புத்தியுடன் நடக்கவும்.

தனுசு: பொதுப்பணிமூலம் புகழுக்கு இடமுண்டு, அரசியல் வாதிகளுக்கு அதிர்ஷ்ட தினம், பிதாவழி மூலம் பொருள் வரவிற்கும் இடமுண்டு, தருமகைங்கரியங்களில் விருப்பு மேலிடும்.

மகரம்: தொழிற் துறையில் புதிய உத்வேகம் காணப்படும், எந்த நிலமையையும் கட்டுப் படுத்துவதில் தனிப்புகழ்அடைவீர்கள், வரவிலும் திருப்திகரமான நிலையைக் குறிக்கின்றது.

கும்பம்: செலவிற்கு வேண்டிய பணம் தாளராமாகக் கிடைக்கும், விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள், புதுமனை கட்டுவதில் எண்ணம் பிறக்கும், சிறப்பான தினம்.

மீனம்: களுகுப்பார்வை உங்களை வட்டமிடும், காத்திருப்பர் பகைவர், நிதிநெருக்கடியை தவிர்க்க மதிவழி நிற்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஓர் இலைமறை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கும் அரும்பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

எழுதுவினைஞராகத் தனது தொழிலை ஆரம்பித்த அமரர் வரிமதிப்பாளராக உயர் பதவி பெற்று, தனது குடும்பப் பொறுப்பைச் செவ்வனே செய்து, மக்களின் நன்மதிப்பைப்பெற்று நல்ல சுகதேகியாகவிருக்கும் வேளையில் தனது புதல்வன் நிருத்தனுடன் சடுதியாக எம்மைவிட்டு அகாலமாகப்பிரிந்துவிட்டார் என நினைக்கும்பொழுது அதனை நம்ப முடியாமலுள்ளது.

தமிழ் இயக்கத்தில் பங்கு பற்றும்பொழுது ''சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும். என் சாம்பல் தமிழ் மணத்து வேகவேண்டும்'' என்ற அடியை அஞ்சல் உறையில் பொறித்து உபயோகித்த அன்னார் ஒரு பிடி சாம்பரைக் கூட பார்க்கமுடியாத முறையில் பிரிந்து சென்றுவிட்டார். ஒரு முட்டையைக்கூட உடைக்கக் கூடாது எனப்போதிக்கும் புத்த மதத்தைத் தழுவி வாழும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இத்தீவில் அன்னாரும் மகனும் மற்றும் பலருடன் படுகொலைசெய்யப் பட்டதை நினைக்கும்பொழுது மனம் வேதனைப்படுகிறது.

தமிழ்பேசும் மக்கள் தமது உரிமையை நிலைநாட்ட எடுத்துள்ள முயற்சியில், தியாகஞ் செய்த வரிசையில் அன்னாரும் அவரது புதல்வனும் அடங்குவர். அவரது பிரிவைத் தாங்க முடியாது தவிக்கும் நாம்.

''எனை ஈன்ற தந்தைக்கும்
தாய்க்கும்—மக்கள்
தமை ஈன்ற தமிழ்நாடு
தனக்கும்
தினை அளவு நலமேனும்
கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாள்
எனக்குத் திருநாளாகும்''.

என்னும் பாரதிதாசனின் கூற்றை நினைத்து நம்மைத் தேற்றி, அன்னாரினதும் அவரது புதல்வன் நிருத்தனினதும் ஆன்மாக்கள் சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

இ. பாலசுப்பிரமணியம்.

## ஊர் வாய்

நக்கீரர்

இந்தப் பகுதியைத் தவறுமல் வாசிப்பவர்களில் ஒருவர் கலாநிதி மௌனகுரு அவர்கள். யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து, ஆராய்ச்சி செய்ததன் மூலம் கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது நபர் இவர் என்பது சரித்திரமாகிவிட்டது. இவர் எமக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். எமது சமூகப் பிரச்னைகளைப் பற்றியது தான். யாழ். வைத்தியசாலைக்கு நாள்தோறும் வரும் ஏராளமான நோயாளிகளைப் பற்றி ஒரு வைத்திய நிபுணருடன் இவர் சமீபத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்தாராம். நோயாளிகளின் தொகை பெரிதாக இருப்பதால் பூரணமாக அவர்களைக் கவனிக்க இயலாமலிருப்பதை நிபுணர் குறிப்பிட்டாராம். நோயாளியைப் பரிசோதித்து மருந்து கொடுப்பதோடு அவரது வேலை முடியவில்லையென்றும், கொடுக்கப்பட்ட மருந்து முறையாக வேலைசெய்வதற்கு அவர் ஓரளவு உளநோய் வைத்தியராகவும் கடமைபுரிவது அவசியமென்றும் நிபுணர் எடுத்துரைத்தாராம். எனவே வைத்தியர் ஒரு சில நிமிடங்கள் நோயாளியுடன் கதைப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினராம். இது இயலாத காரியம் என்பது எமக்குத் தெரியும். நோயாளியுடன் பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் என்ன நேரிடுமென்பது வைத்தியர்மாருக்குத் தெரியும். வெளியூரிலே அரசாங்க வைத்தியர் ஒருவர் நோயாளி தன் முன் வந்ததும் ஓரிரு கேள்விகளைக் கேட்ட பின்பு நாக்கை வெளியே நீட்டும்படி பணிப்பாராம். பரிசோதித்து மருந்தெழுதி அவரை அனுப்பும் போதுதான் நாக்கை உள்ளே எடுக்கச் சொல்வதுதான் அவர் கையாளும் தணிக்கை முறை. நிலைமை இப்படியிருக்க உடல் வளத்தையும் உள வளத்தையும் நோயாளியுடன் ஆராய்வது முடியாத காரியமென்று நிபுணர் வாதித்தாராம் கலாநிதி மௌனகுரு இந்த விஷயத்தை அவரின் நண்பரான டொக்டர் நந்தி அவர்களிடம் கூறியபோது இவருக்குக் கிடைத்த பதில் சுவையாகவும் நியாயமானதுமாக இருந்தது. அவர் கூறுகிறார்: 'வைத்தியசாலைகுள்ளே டொக்டர் செய்ய முடியாததைத்தானே வைத்தியசாலைக்கு வெளியே, சுவரோரமாகக் குந்தியிருக்கும் குறத்திகள் செய்கிறார்கள். போத்தலும் கையுமாக நோயாளி வெளியே வரும் போது முக வசீகரத்தாலோ சொற்சாதுரியத்தாலோ குறத்தி நோயாளியைத் தன் முன்னே இருத்திவிடுவாள். பிறகு நோயாளியின் கையைப் பிடித்துப்பார்த்து, அவருக்கு இதுவரை இருந்த கஷ்டகாலம் நீங்கி இனி தேகசுகம் படிப்படியாகத் திருப்தியடையுமென்றும், மருந்தையும் ஒழுங்காக எடுத்து நல்ல சத்துள்ள சாப்பாட்டையும் உண்டுவந்தால் பூரண குணம் விரைவில் நிச்சயமாக வரும் எனவும் கூறுவாள். உளநூல்களைப் பலகாலம் கற்றவள் போல் மேலும் பல அறிவுரைகளைக் கூறுவாள். இரண்டு ரூபாய் கைமாறும். பெரும்பாலும் உபதேசம் பயனும் தரக் கூடியதாக இருக்கும். இது உள்ளே இருக்கும் டொக்டர் செய்யவேண்டிய வேலை. ஆனல் ஒரு முக்கிய வித்தியாசம். இங்கே நோயாளி குறத்தியுடன் மனம்விட்டுக் கேள்விகள் கேட்கலாம். உள்ளே அது முடியாது.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

இதைக் கூறும் போது ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. நோயாளி டொக்டரிடம் மனம் விட்டு ஒரு கேள்வி கேட்டதால் வந்த வினை. ஆனல் விந்தை என்னவென்றால் நோயாளியும் அரசாங்க வைத்திய நிபுணரும் சந்தித்த இடம் அரச வைத்தியசாலை அல்ல. ஒரு தனியார் வைத்திய நிறுவனத்தில். பணம்கட்டி, பரிசோதனை முடிந்து மருந்தும் எழுதிய பின்பு நோயாளி நிபுணரைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார். தெரிந்தோ தெரியாமலோ அவரின் வாயிலிருந்து வந்துவிட்டது. நிபுணர் பதறினர்; துள்ளிக் குதித்தார். பணத்தை நோயாளியிடம் திருப்பிக்கொடுத்து விடச் சொல்லிவிட்டு, தனக்கும் அந்த நோயாளிக்கும் இனி ஒரு தொடர்பும் இருக்கத் தேவையில்லை என்று கர்ச்சித்து விட்டுப் போயேவிட்டார். அந்த நோயாளி கேட்டகேள்வி இதுதான்- ''டொக்டர், நான் வழக்கமாக முட்டை சாப்பிடுகிறனன். தொடர்ந்து சாப்பிடலாமா?'' வைத்தியர்கள் வைத்தியப் பட்டம் பெற்று வெளியேறும் போது, வைத்திய சாஸ்திரத்தின் தந்தை எனப்படும் கிரேக்க வைத்திய ஞானி ஹிப்போகிறேட்டீஸின் பேரில் ஒரு சத்தியம் செய்வார்களாம். அந்தச் சத்தியத்தைக் காப்பாற்ற முடியாத வண்ணம் எமது வைத்தியர்கள் நடப்பதற்கு நோயாளிகள் இப்படியான பொல்லாத கேள்விகளை ஏன்தான் கேட்கிறார்களோ நாமறியோம்.

## மணிவாக்கு

அஹிம்சை என்பது விரிந்த, பொருள் பொதிந்த கொள்கை. நாமெல்லோரும் இம்சை என்னும் பெருந் தீயில் அகப்பட்டு திக்கற்ற நிலையிலுள்ள மாந்தர்களாவோம்.

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## சடலம் சடலம் சண்முகா சடலம்!

தன்னைச் சரணடைந்த ஆன்மாக்களுக்கு மரணம் பிறவி இரண்டும் இல்லையென்பதே தமிழ்த்தெய்வமாகிய கலியுக வரதன் கந்தனின் கட்டளை.

இன்று யாழ்ப்பாணம் என்ற 'நல்லூரில்' கந்தனை வழிபடும் அடியார்நிலை முற்றும் மாறியிருக்கின்றது.

மன்னார், வவனியா, யாழ்ப்பாணம், சுன்னுகம், கைதடி, வல்வெட்டித்துறை போன்ற மாவட்டங்களிலும் சிற்றூர்களிலும் எழும் கோஷம் 'சடலம் சடலம் சண்முகா சடலம்' என்பதே!

தன்னூரில் பிறந்து தன்னூரில் வளர்ந்து, இது தந்தையர் நாடென்ற உணர்வினுல் உந்தப்பட்ட மக்கள் 'பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னுட்டுக்கும்' இங்கு இடமில்லை யென்ற நிலையில் ஆத்திரங்கொண்டு எழுந்தனர்; வன்செயல்கள் ஏற்படுத்திய மோதல்இன்று இப்பகுதியில் பல இடங்கள் சுடுகாடுகளாக காட்சியளிக்கின்றன.

எங்கு பார்த்தாலும் அவலக் குரல், பிணவீடு, இளைஞர்கள் பெண்கள் வயோதிபர் சிறுவர் மாண்ட செய்தி காட்டுத் தீ போல் பரவி மக்களை துயர வெள்ளத்தில் தள்ளி விட்டது.

ஆஸ்பத்திரிகளின் பிரேத அறையில் இடமில்லை; பல நாட்களாக சடலங்கள் எவ்வித விளக்கமும் பரிசோதனையுமின்றி நாற்றமெடுக்கின்றன; கடந்த காலங்களில் பல சடலங்களை ஒன்ருகப் போட்டு எரித்தபடியால் இன்றைய நிலைமை அன்று எழவில்லை.

நாம் குறிப்பிடும் சடலங்கள் பல நேற்று இருந்து இன்று உயிரிழந்த பிணங்கள்.

நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை எனனும் பெருமை உடைத்து இவ் வுலகு' என்ற வள்ளுவர் வாக்கின் சிறப்பை எடுத்துரைக்கும் காட்சியே யாழ்ப்பாணத்திலும் மற்றைய வடபகுதிகளிலும் காணப்படுகிறது.

உலகத்தின் நிலையாமை என்ற பெருமைபற்றி நாம் நல்லூர்கந்தனிடம் பெருமிதம் பேசும் வாய்ப்பு இன்றில்லை.

நேற்றுக்காணப்பட்டோர் இன்றில்லை

**இன்று உள்ளார் எந்நிலையடைவாரோ?** என்ற அச்சத்தால் 'சண்முகா சரணம்' என்கிறோம்.

இந்தச் 'சடலப்' பிரச்னை தமிழ்மக்களுக்குத்தான் பிரத்தியேகமான கல்ல; **சிங்கள இளைஞர் தொழில் தேடி ராணுவத்தில் சேர்ந்தவர்கள். அவர்கள் இவ்வாறு கொல்லப்படுவதை**யும் நாம் மறுக்கவில்லை. அவர்களின் பெற்ருேர் மனைவிமக்கள் என்னென்ன அல்லோல கல்லோலப்படுகிருர்கள் என்பதை நாம் கற்பனை செய்யமுடியாதவரல்ல.

இவ்வாறு ஒரு சிறுநாட்டில இனரீதியாக கலவரத்தை, பயங்கரப் போரை உருவாக்கி நீண்டகாலமாக நிலைக்க வைக்கும் அரசையே நாம் சாடுகிருேம்.

எதனைத் தடுக்க இந்த அரசு முயல்கின்றதோ அதனை அது வளர்த்து உருவாக்கி தோல்வி காணுமென்பது எமது பணிவான கருத்து.

பிரிவினை பயங்கரவாதம் என்ற பதங்களை எவ்வித ஆழமான விளக்கமோ அரசியல் ஞானமோ இன்றி பந்தாடி வந்திருக்கிறதோ அவற்றிற்கு உருக்கொடுத்து வருவதால் இன்றையநிலை ஏற்பட்டிருக்கிறது.

அஹிம்சையை ஆயுதமாகக்கொண்டு படைபலம் கொண்ட ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி பெற்ருர் காந்திஜி, அதே போல் தேசிய நலன்களைச் சர்வதேசக் கண்ணேட்டத்திலேயே முடிவுசெய்வேன் என்ற நேருஜியின் கோட்பாடும் இன்றைக்கும் வெற்றியளித்து வருவது இன்றைய இந்திய சுதந்திர தினத்தில் நாம் பெருமைப் படவேண்டிய பெரும்விடயங்கள்.

இந்த நன்னளில் எங்கள் நாடு, இந்திய சுதந்திர போராட்டத்தின் பயனுக சுதந்திரம் பெற்றநாடு என்பதை நாம் நினைவூட்ட வேண்டும். இன்று இந்தியாவுக்கெதிரான தீய சக்திகள் இலங்கைக்கும் தீமை விளைக்குமென்ற பரந்த அரசியல் அறிவை இழந்திருக்கிருேம் நரிவாலைக்கொண்டு கடல் ஆழம் பார்க்கும் பாங்கில் எமது அரசியல் செயல்படுவது வேதனைக்குரியது.

இன்று வாலைச் சுருட்டிய நிலை ஏற்பட்டபோதும் இங்கு தொடரும் கொள்கைகள் இலங்கை-இந்திய நட்புறவுக்கு உகந்ததல்ல.

சென்னையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் சந்தேகக்கண்ணுடன் பார்க்கும் இலங்கை அரசுக்கு நிச்சயம் வேதனையளிக்கும். எனவே அந்த விசாரணை செவ்வனே நடைபெற்று பாரபட்சமற்ற தீர்வும் தண்டனையும் அந்த மகா பாதகர்க்கு வழங்கப்படுவது மிக அவசியம்.

இந்திய அரசு இந்த வகையில் ஒருபோதும் தவறுதென்பது எமது நம்பிக்கை; அதேபோல் இவ்வித கொடிய செயலை யார் செய்தாலும், அந்த இனத்துக்கு மேல் அப்பழியைச் சூட்டிவிடுவது நீதியன்று. பல பெரியவர்கள் வாழும் சிங்கள சமூகம் கடந்த வருடம் ஆடிக்கலவரத்துக்குபொறுப்பென எந்தத் தமிழர் வாதாடுவார்?

பெரும் போக்குடைய அரசியல் தந்திரமே இன்று இந்தச் சிறுமை நிறைந்த நாட்டுக்கு அவசியம்; குறுகிய இனக்குரோதத்துக்கு இங்கு இடமில்லை யென்பதை நாட்டு மக்கள் உணர வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது.

இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் அழிவை பொருட்படுத்தாது நடிப்பவர்கள் எல்லாம் வெள்ளம் வந்த பின் அணைகட்டும் வீரர்களே!

''ஈசனே காப்பானல்லால் யாரையும் பிறரால் தம்மால் ஆசறப்போற்றலாகாது அது துணிவாகும்'' என்று கந்தபுராணம் கற்பிக்கும் உண்மையே நாட்டைக்காக்கும்.

## வல்வை பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையத் தாக்குதலின் போது, சரமாரியாகக் குண்டுகள் வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இக்குண்டு வீச்சினுல்கட்டிடத்தின் ஒரு பகுதி சேதமடைந்தபோதிலும், அங்கு கடமையிலிருந்தவர்கள் எவரும் கொல்லப்படவில்லை.

இத்தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பொலிஸ் நிலையம் முன்னல் இனம் தெரியாத ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கபபட்டுள்ளது. (மா)

## கப்பல் கூட்டுத்தாப...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசி அழைப்பொன்றுவந்தது.

இதனையடுத்து கூட்டுத்தாபன ஊழியர்கள் பரபரப்படைந்தனர். ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு, பொலிசாரும் வெடிகுண்டு நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு கூட்டுதாபனத்தில் பலத்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கப்பல் கூட்டுத்தாபனத்தில் எவ்வித குண்டும் வைக்கப்படவில்லையென்பது சோதனையின் பின்னர் தெரியவந்தது. (இ)

## சுன்னுகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்காக சுற்றுப்புற வீதிகளில் பலமான தடைகள் போடப்பட்டிருந்தன.

சுன்னுகம் மின்சார நிலையத்திலுள்ள பாரம்தூக்கும் வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டும் இடிபாடுகள் அகற்றும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அவ்வாகனம் பறிமுதல் செய்யப்பட்டதாம்.

அடுத்தநாள் திங்கட்கிழமை காலை இப்பகுதி மக்கள் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். செபநாயகத்துக்கு தெரிவித்த முறைப்பாட்டின்பேரில் அவை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் ஆகியோருடன் தொடர்பு கொண்டார்.

அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பேரில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து புல்டோசர் கொண்டுவரப்பட்டு சுமார் 5 மணித்தியாலங்கள் மீட்பு வேலைகள் நடைபெற்றன.

ஆயிரக்கணக்கான பொது மக்கள் அகோர வெய்யிலையும் பொருட்படுத்தாமல் மீட்பு வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

மேற்கொண்டு சடலம் எதுவும் எடுக்கப்படவில்லை.

(மா)

# கைதடிச் சம்பவம்

[அலுவலக நிருபர்]

கைதடியில் இடம்பெற்ற சம்பவத்தில் 9 பேர் ஸ்தலத்திலேயே பலியானுர்கள். சுமார் 25 பேர் காயமுற்ருர்கள்.

நேற்றுமுன்தினம் நண்பகல் இச்சம்பவம் நடைபெற்றது.

கைதடிப் பகுதியூடாக வந்து கொண்டிருந்த ஒரு வாகனத்துடன் மினிவான் ஒன்று மோதி சிறு விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்[38 வயது] கைதடி, கந்தசாமி சின்னத்துரை [38 வயது] கைதடி, சிதம்பரன் சூரியகுமார் [21 வயது] கைதடி, ஆறுமுகம் செல்வரத்தினராசா[42வயது] கைதடி, 12 வயதுச் சிறுவன் கதிரவேலு குகனேந்திரன், மார்க்கண்டு சின்னராசா (25 வயது), கந்தையாபாலு (26 வயது), சுப்பிரமணியம் நடனசபேசன் (19 வயது நாவற்குயளி) ஆகி எட்டுப் பேரின் சடலங்ளுடன் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலமும் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. இச்சடலம் மினிவானுக்கருகில் கிடந்ததக கூறப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 6 மணியளவில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு 9 பேரின் சடலங்களும் கொண்டுவரப்பட்டு பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. (மா)

## வடபகுதி நிலைமை...

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லாது வடபகுதி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றியும் அந்த மகஜரில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

### தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு

இலங்கைத் தமிழர்களின் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று இவ்விரு வல்லரசுகளின் அரசாங்கங்களும் இலங்கைஅரசை வற்புறுத்த வேண்டுமென்றும், வடபகுதி நிலைமைகுறித்து இவ்விரு வல்லரசுகளின் அரசாங்கங்களுக்கு அறிவித்து தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை நிறுத்துமாறும், காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்ய வேண்டும் என்றும் அந்த மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் குழுவொன்றை அனுப்பி நிலைமையை அறியவேண்டுமென்று இவ்விரு வல்லரசுகளின் அரசாங்கங்களை வலியுறுத்த வேண்டுமென்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதியின் இன்றைய நிலைமை தொடர்ந்து நிலவும் பட்சத்தில் இம்மாதம் 17ம் திகதி நடைபெறவுள்ள சர்வகட்சி மகாநாட்டில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கலந்துகொள்ளமாட்டதென்று தெரியவருகிறது. [இ]

## ஆங்கிலக் கால்வாயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தனும் இவ் விதமே நீந்துவதற்கு முன்னர் இக்கட்டணத்தைச் செலுத்தியிருந்தார். இந்த நீச்சலுக்கான வைத்திய உதவி மற்றும் பாதுகாப்புஉதவிகள் யாவும் இச்சங்கத்தினுல்வழங்கப்படும்.

ஆழிக்குமரன் சுயநினைவை இழந்திருந்தும் அவர் கடலிலிருந்து வெளியே தூக்கப்பட்டு ஹெலிகப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். 1875 ஆம் ஆண்டு ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கொண்டிருந்த போது ஆங்கிலேயர் மரணத்திற்குப் பின்னர் இறந்தவர் ஆனந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### வை. இராசையா (ராசா)

### (ரவீந்திரா ஏஜன்சி, வவுனியா)

வை. இராசையா—உரிமையாளர் (ரவீந்திரா ஏஜன்சி வவுனியா) சிவபதமடைந்தார், அன்னர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரன், பிரேமச்சந்திரன், ஜெயச்சந்திரன், மோகனசந்திரன் ஆகியோரின் ஆன்புத் தந்தையும், வவுனியா தம்பிப்பிள்ளை ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சி, தம்பிப்பிள்ளையின் பெருமகனும், வை. கைலாயபிள்ளை (கைத்தொழில் இலாகா, கொழும்பு), சி. நாகராசா (சட்டத்தரணி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் எழுதுமட்டுவாளில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் ஏற்றுக் கொள்ளவும். 1339)

## மரண அறிவித்தல்

### கனகசபை மயில்வாகனம்

ஏழாலை மேற்கு

இளைபபாறிய ஆசிரியர் க. மயில்வாகனம் 14-8-84 செவ்வாய்க்கிழமை காலமானுர். அன்னர் இளைப்பாறிய ஆசிரியை தங்கம்மாவின் அன்புக்கணவரும், திருமதி பக்தவத்சலாதேவி, குமாரசாமி, பாலசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா), Dr. தணிகாசலம், திருமதிகள் ஏகாம்பரேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, திலகேஸ்வரி-செல்வயோகன், ருக்மணிகாந்தன் அவுஸ்திரேலியா), செல்வி வள்ளிநாயகி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசாமி (ஆசிரியர், ஏழாலை சைவ மகாஜன), கிருஷ்ணமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட அபிவிருத்திச்சபை, புத்தூர் கிளை), செல்வயோகன் (நெல் சந்தைப்படுத்தும் சபை, மன்னர்), திருமதிகள் Dr. வசந்தி பாலசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா), இராஜேஸ்வரி தணிகாசலம் (ஆசிரியை, இணுவில் சைவ மகாஜன ம. வி) ஆகியோரின் அன்பு மாமனுரும், ஜனனி, விமலினி, வாசுகி, முருகானந்தன், தர்மினி, துவாரகா, குகானந்தன், காயத்திரி, அமலா, நிரூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் 14-8-84 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஏழாலையில் நடைபெற்றன. (1338)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.